[28th January 1961

THE HON. SRI P. KAKKAN : ஒட்டேரி நல்லா என்கிற கால்வாய் நகரத்திற்குள் வருகிற ஒன்று. அதைச் செப்பனிடுவதற்கு முதலில் கார்ப்பரேஷனோடு பேசினோம். அதற்கு ஆகும் செலவை ஒப்புக்கொள்ளமாட்டேன் என்று சொன்னார்கள். இருந்தாலும் அங்கு இருக்கிற மக்களின் நலனை உத்தேசித்து சர்க்காரே மராமத்து இலாகா மூலமாக தடுப்புச்சுவர் எழுப்ப முடிவு செய்தது. மழை பெய்கிறபோது அதில் இருந்து தண்ணீர் வெளியே பாயாதபடி செய்வதற்கு அந்தத் திட்டம். மொத்தம் 502 அடிகளில் 312 அடி கட்டி முடித்தாகிவிட்டது. பாக்கியையும் கட்டி முடிப்பதாக பிரதம இன்ஜினியர் சொல்லியிருக்கிறார்கள்.

Destitute Home

* 239 Q.—SRI T. S. RAMASWAMI : Will the Hon. the Minister for Home be pleased to state—

(a) whether the Destitutes' Home which was run by the Dewaswom Board at Nagercoil at the time of the transfer of the district to Madras is still being run by the Board; and

(b) if not, the reasons therefor?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) No, Sir.

(b) The Home has been transferred to the management of a private person as the transfer resulted in savings in expenditure to the Devaswom Board. At the same time the Home is run properly and is being supervised by the officers of the Devaswom Board

SRI T. S. RAMASWAMI : Sir, may I know whether any grant is given to this private management and if so, what is the amount of grant given?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Yes, an annual grant of Rs. 4,800 by the Devaswom Board. But when the Devaswom Board was managing this institution, they were incurring an expenditure of Rs. 8,250 per annum. Now, on account of the transfer, there is an annual saving of Rs. 3,450 to the Devaswom Board.

SRI T. S. RAMASWAMI : May I know whether the private management is getting grant from other departments like Harijan Welfare Department?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : This question may be put to the Hon. Minister-in-charge of Harijan Welfare.

Periyar channel

* 240 Q.—SRI N. R. THIAGARAJAN : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

மதுரை ஜில்லா, கம்பம், வெங்கிடாசலபுரம் பகுதி 18 குளங்களுக்குத் தண்ணீர் கொடுக்க பெரியாறு கிளை வாய்க்கால் தோண்டும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?

28th January 1961]

THE HON. SRI P. KAKKAN : The estimate for the scheme has been received from the Chief Engineer (Irrigation). The report of the Collector of Madurai and the Board's remarks thereon have now been received and they are under examination.

MR. SPEAKER : Questions are over.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

II.—STATEMENT BY THE HON. MINISTER FOR HOME.

MR. SPEAKER : The Hon. Minister for Home will now make a statement under Rule 82 of the Assembly Rules.

(Sri M. Kalyanasundaram rose.)

The hon. Member cannot make any speech. He can just put a question and if the Hon. Minister is prepared to reply, I have no objection.

SRI M. KALYANASUNDARAM : நம்முடைய ராஜ்யத்திற்கு தமிழ்நாடு என்று பெயர் இடவேண்டும் என்கிற கோரிக்கையை முன்னிட்டு இந்தச் சட்டசபையில் பல கட்சியினர் வற்புறுத்தி வந்திருந்தபோதிலும் அது என்ன முடிவு செய்யப்பட இருக்கிறது, எந்த நிலையில் இருக்கிறது என்பது எங்களுக்குத் தெரியாது. அப்படி இருக்கும்போது தமிழரசுக் கழகத்தினர் சட்டசபை முன்பும், சர்க்கார் காரியாலயத்தின் முன்பும் மறியல் செய்வது என்று முடிவு செய்திருப்பதாகவும், தமிழரசுக் கழகத் தலைவர் முதல் மந்திரி அவர்களையும், உள்நாட்டு மந்திரி அவர்களையும் சந்தித்துப் பேசியிருப்பதாகவும் பத்திரிகையில் நாம் பார்க்கிறோம். இந்தச் சபை நடந்துகொண்டிருக்கிறபோது இது பற்றிய விஷயம் இந்தச் சபைக்கும் அறிவிக்கப்படவேண்டும் என்று நான் கருதுகிறேன். அரசாங்கம் இது சம்பந்தமாக என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள்? எடுக்கப் போகிறார்கள்? இச்சபையில் உள்ள அநேகருடைய கருத்தும் தமிழ்நாடு என்று பெயரிடவேண்டும் என்று இருப்பதால் அரசாங்கத்தினுடைய கருத்து அதுபற்றி என்ன? இவற்றையெல்லாம் இச்சபைக்குத் தெரிவிக்கும் உத்தேசம் உண்டா என்பதை எல்லாம் தெளிவுபடுத்தவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : கனம் சபாநாயகர் அவர்களே; நான்-அபீஷியல் டே வர இருக்கிறது அன்று இதுபற்றிய தீர்மானம் வருகிறது. கனம் நிதி அமைச்சர் அவர்கள் அப்போது எல்லாவற்றையும் தெளிவாக விளக்குவார்கள் என்று தெரிவித்துக்கொள்கிறேன். ஏதோ கிளர்ச்சி பற்றி சொன்னார்கள். ஆனால் கிளர்ச்சி என்றால் எனக்குக் கிடைத்த தகவல்படி டெமான்ஸ்ட்ரேஷன் நடத்துவதாகத்தான் கண்டிருக்கிறது. பலாத்காரச் செயல்களில் ஈடுபடப்போவதாக ஒன்றும் இல்லை. அதுதான் நிலைமை.